**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

**இரண்டாம் வருட கலைமாணிப் பரீட்சை - பருவம் II - 2017/2018**

**PSC 2235 - பிராந்திய மற்றும் பூகோள அரசியலில் இலங்கை**

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**மூன்று** (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

ஒவ்வொரு விடையும் ஆகக்கூடியதாக **இருபது** (20) புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

01. அ) 'வெளிநாட்டுக் கொள்கை' எனும் பதத்தை வரையறை செய்க.

ஆ) வெளிநாட்டுக் கொள்கை உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விளக்குக.

02. சர்வதேச விவகாரங்களில், இந்து சமுத்திரத்தில் இலங்கையின் புவியியல்சார் அமைவிடத்தின் சவால்களைப் பகுப்பாய்வு செய்க.

03. பனிப்போர் காலப்பகுதியில், மேற்கத்தேய முதலாளித்துவ அணி மற்றும் கிழக்கத்தேய சோசலிச அணியுடனான இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளின் பண்புகளை நுணுக்கமாகப் பரீட்சிக்குக.

04. அணிசேரா இயக்கம் வெளிப்பட்ட காலப்பகுதியின் புதிய போக்குகளை அடிப்படையாகக் கொண்டு 1970 களின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை மதிப்பிடுக.

05. பின்வரும் கூற்றுக்களில் ஏதாவது தொடர்பில் கலந்துரையாடுக:

**ஒன்றில்**

"இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் 1956 ஆம் ஆண்டு ஓர் நிலைமாற்றத்தின் ஆரம்பமாகக் கருதப்பட முடியும்."

**அல்லது**

"சுதந்திரம் அடைந்த காலம் முதல் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது கட்சி அரசியலினால் நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது."

**P.T.O.**

06. 1980 களுக்குப் பின்னரான இந்திய-இலங்கை உறவுகளின் மீது இலங்கையின் இனத்துவ நெருக்கடி ஏற்படுத்திய தாக்கத்தினை பரீட்சிக்குக.

07. பின்வருவனவற்றில் **இரண்டிற்கு (02)** குறிப்புகள் எழுதுக:

அ) பொதுநலவாய ஒழுங்கமைப்பில் இலங்கையின் வகிபாகம்.

ஆ) ஐக்கிய நாடுகள் சபையுடனான இலங்கையின் அண்மைக்கால தொடர்பாடல்கள்.

இ) இலங்கையும் சார்க் (SAARC) அமைப்பும்.

ஈ) இந்து சமுத்திரத்தில் சீனாவின் பொருளாதார வகிபாகம்.

**********************